விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 ஐப்பசி 13 முஹறம் 23 இதழ் 259
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 30 10-83

# "உள்நாட்டு பிரச்னையென்று அண்டைநாட்டை மிரட்டலாமா?"

## தமிழ்நாட்டு சஞ்சிகை கேட்கிறது!

(சென்னை)

''இலங்கையில் தமிழ் மக்களின் உயிரும் உரிமைகளும் பறிக்கப்படுவது உள்நாட்டு அரசியல் பிரச்னை அல்ல. அது மனிதகுலத்தின் பொதுவான உரிமைப்பிரச்னையாகிக் கொண்டிருக்கிறது. அந்நாடும் அதை ஆதரிப்பவர்களும் இந்த உண்மையை உணரப் போகும் நாள் வெகு தொலைவிலில்லை''

இவ்வாறு தமிழ் நாட்டின் 'ஆனந்தவிகடன்' சஞ்சிகை தனது 29-10-83 இதழில் இன்றைய இலங்கை அரசியல் நிலை குறித்து எழுதியுள்ள ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

அடுத்த வீட்டில் ஓயாத சண்டை, அடிதடி, கூக்குரல், ஓலம், சச்சரவுக்கான காரணங்கள் என்னென்ன, யார் மீது தவறு, தீர்வுக்கு என்ன வழி என்பதெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். வலுவுள்ளவர், வலுவற்றவரைத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறார். அக்கிரமம் நடந்துகொண்டிருக்கிறது.

அநியாயம் நடக்கிறதென்று தெரிந்த அடுத்த வீட்டுக்காரர் கதவைத் தட்டுகிறார். வீட்டுச் சொந்தக்காரர் எட்டிப்பார்க்கிறார். அண்டை வீட்டுக்காரர் 'என்ன தகராறு?' என்று விசாரிக்கிறார். 'அடியும் உதையும் இல்லாமல் உங்கள் பிரச்னையைப் பேசித்தீர்த்துக் கொள்ளமுடியாதா?' என்று கேட்கிறார்.

வீட்டுச் சொந்தக்காரருக்குக் கோபம் வருகிறது. ''இது எங்கள் வீட்டு விஷயம். நீங்கள் இதில் தலையிடுவது அநாவசியம். உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டுபோங்கள்'' என்கிறார்.

நியாயம் கேட்கச்சென்றவர் வாயைப்பொத்திக்கொண்டு

(10ம் பக்கம் பார்க்க)

## ● தமிழ்நாடு சட்டமேலவையில் அறிவிப்பு:

# இந்தியாவில் 23 ஆயிரம் இலங்கை அகதிகள்!

(சென்னை)

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்களைத் தொடர்ந்து இந்தியாவுக்கு இருபத்திமூவாயிரத்து முன்னூற்றி ஏழு பேர் அகதிகளாக வந்துள்ளனர்! இவர்களில் 5144 பேர் தற்போது முகாமில் தங்கியுள்ளார்கள்.

இத்தகவலைத் தமிழ்நாடு செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர் எம். வீரப்பன் சட்ட மேலவையில் தெரிவித்துள்ளார். சட்ட மேலவையில் முதலமைச்சரின் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் தமிழ்நாடு மிகத்தீவிரமான நடவடிக்கைகளை பிரதமர் இந்திராவுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டுவருகிறது. எமது பிரதிநிதி எஸ். ராமச்சந்திரன் ஐ. நா. சபையில் இதுபற்றி 31-ம் திகதி மாநாடு ஒன்றினைக் கூட்டுகிறார். இது வரலாறு காணாத நிகழ்ச்சியாகும். விவாதத்தில் மேலவை துணைத்தலைவர் திரு புலமைப்பித்தன் பேசுகையில், குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்ற விடுதலை வீரர்களை இலங்கையில் கொன்றது காட்டுமிராண்டித்தனமானதென்று உணர்ச்சிவசப்படக் கூறினார்.

தி. மு. க. உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் பேசுகையில், சைபிரசில் 3 பேர் கொல்லப்

(10ம் பக்கம் பார்க்க)

## ஈழவிடுதலை மகாநாடு டிச. மதுரையில் நடைபெறும்

### வீரமணி ஏற்பாடு

திருச்சி, அக். 29

இலங்கைத் தமிழர்களின் தனிநாடு ''தமிழ் ஈழம்'' கோரிக்கையை ஆதரித்து மதுரையில் டிசம்பர் மாதம் மாநாடு நடைபெறும் என்று திராவிட கழக பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழ் ஈழ விடுதலையை அங்கீகரித்து, 'ஈழவிடுதலை மகாநாடு' மதுரையில் டிசம்பர் மாதம் நடைபெறஇருக்கிறது.

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ். நோக்கி வந்த பஸ்ஸில் டைனமைட்!

(மாவிட்டபுரம்)

பருத்தித்துறையிலிருந்து நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்தை நோக்கிவந்த பஸ்ஸில் ஒருபெட்டி 'டைனமைட்' வல்வெட்டித்துறை பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து பஸ்ஸை சோதனையிட்ட வல்வெட்டித்துறை பொலிசார் பிரயாணிகளுடன் பஸ்ஸை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று விசாரணை நடத்தினர். 'டைனமைட்'டுக்கு பிரயாணிகள் எவரும் உரிமை கோரவில்லை. (மா)

## இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபன ஊழியர் இடமாற்றம்: அரசாங்கம் இணக்கம்!

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட அரச, அரசாங்க கூட்டுத் தாபன ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு சமர்ப்பித்துள்ள திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அது தொடர்பாக இடமாற்றம் பெறுபவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றைத் தயாரித்தளிப்பதற்கு பாதிக்கப்பட்ட இணைப்புக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்தகவலை பாதிக்கப்பட்ட

(10-ம் பக்கம் பார்க்க)

நவம்பர் 6ல் ஈழநாடு வாரமலர்

வெள்ளிவிழா ஆண்டில் மீண்டும் ஈழநாடு வாரமலர் உங்கள் கரங்களில் தவழவருகிறது. தமிழ்மக்களின் அபிமானத்தைப் பெற்ற ஈழநாடு தினசரியின் வாரமலர் மீண்டும் அடுத்த ஞாயிறு நம்பர் 6ல் வெளிவருகிறது. முற்றிலும் மாறுபட்ட புதிய அமைப்பில் இரண்டு ரூபாவுக்கு வாரமலர் கிடைக்கும்.

## மாநகரசபை வளவிலிருந்து எம்மை அகற்றும் முயற்சி கைவிடப்பட வேண்டும்

### பாஷையூர் பெண்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

''பாசையூர் பிரசவவிடுதி வளவினுள் குடியேறியுள்ள எம்மை வெளியேற்றினால் ஏழைகளாகிய நாம் எமது குழந்தை குட்டிகளுடன் எங்கே போவது?

கடற்றொழில் செய்து வயிறு வளர்க்கும் எமக்கு வசிப்பதற்கு வேறு இடமே கிடையாது. எமது ஏழ்மை நிலையை யாழ். மாநகரசபையின் உயர் அதிகாரிகளும் சமுதாயத்தி

(10ம்- பக்கம் பார்க்க)

## "யுத்தத்துக்குத் தயாரில்லை!"

### –பிரதமர்

(கொழும்பு)

''நாம் எந்த வெளிநாட்டுடனும் யுத்தம் செய்யத்தயாராகவில்லை. சமாதானத்துடனும், அமைதியுடனும் வாழவே விரும்புகிறோம்'' என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஊவா-பரணஹம தொகுதியில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

Saibaba
ADVERTISING ASSOCIATES

வாரமலர் அறிமுகம்

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் தமிழ் வாரமலர் ஒன்றுக்கு தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், கலைஞர்கள் விமர்சகர்கள் மற்றும் பல்துறை விற்பன்னர்களிடமிருந்து விடயதானங்கள் வரவேற்கப்படுகின்றன. பத்திரிகை — நிர்வாகம்' விளம்பரம் சேகரிப்பு. விற்பனை நியமனங்கட்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்

140, நாவர்வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22437 (9611)

வியாபாரிகட்கும்,
ப. நோ. கூ. சங்கங்கட்கும்

ஓர் நற்செய்தி!

எங்களிடம்
லக்ஸ்பிறே, யானை தீப்பெட்டி, நெஸ்லே
பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு
எங்களிடம் வாங்கும் உள்ளூர் விலை பொருட்களில்
விசேட கழிவுகளும் - சலுகைகளும்
வழங்கப்படும்.

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

எஸ். வி. முருகேசு,
நம்: 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 22564.
(9479)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Honda CD 125 Twin மோட்டார் சையிக்கிள் விற்பனைக்குண்டு 351, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தி அருகாமையில்). 9592

காரைநகர் தெற்கில் (நீலன் காட்டில்) ஹோட்டல், தொழிற்சாலை அமைக்கஉகந்த 60 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: போன்: 26819, கொழும்பு. 9513

யாழ். நகரில் 37, ஸ்டான்லி வீதியிலுள்ள பிரபல வியாபாரக் கட்டிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 22335. 9588

முல்லைத்தீவு மெயின் வீதியில் அமைந்துள்ள 'சரவணாஸ்' என்னும் உதிரிப்பாக விற்பனை நிலையம் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு: சரவணாஸ், முல்லைத்தீவு 9585

கச்சாய் துறைமுகத்திற்கு முன்பாகவும், கச்சாய்-கொடிகாமம் றோட்டோடும் 9½ ஏக்கர் தென்னந்தோட்டமும், வயல் நிலமும் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9563, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9563

பொஸ் (ஜெர்மன்) எலெக்றிக் 4 அடுப்பு குக்கர் (Oven உடன்), 2 கதவு பொஸ் குளிர்சாதனப்பெட்டியும் புத்தம் புதிய நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: நா. குமாரசாமி, ஐக்கியவியாபாரச் சங்கம், ஆஸ்பத்திரிக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 9577

கைதடி சந்திக்கும், நாவற்குழி றேயில்வே ஸ்ரேசனுக்குமிடையில் கண்டி றோட்டில் கைதடி அனாதை இல்லத்திற்கு முன்பாக 200 யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு சற்சதுரமான 4 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். S.யோகநாதன், C T.B.உத்தியோகத்தர், ஊரெழு அம்மன் கோவிலடி, ஊரெழு 9587

மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் கந்தசாமிகோவில்லிருந்து ½ கட்டை தூரத்தில், தொழிற்சாலை அமைக்கக் கூடிய சகல வசதியும் கொண்ட 9½ பரப்பு றோட்டோரக்காணியும், கரணவாய் வடக்கு, யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் 11½ (நெற்) பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு-மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9578

எங்களால் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கில மருந்துச்சாலையில் (Pharmacy) சகல விதமான மருந்து வகைகளும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் ஆதரவையும் அன்பையும் என்றும் எதிர்பார்க்கிறோம். பகல், இரவு சேவை நடைபெறும். ஸ்ரீராம்ஸ் மெடிக்கல்ஸ், கோப்பாய் வீதி, உரும்பிராய் சந்திக்கு அருகாமையில். 9549

புதிய நிலையில் சொற்பகாலம் பாவித்த 86 ஸ்ரீ 8000 தொடர் இலக்கமுடைய CB 125 N HONDA மோட்டோர் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். Agromac Ltd, (Mascon Ltdக்கு பக்கத்தில்), 37/3, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம், 9590

## விற்பனைக்கு

நீர்வேலி வில்லு மதவடிக்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியில் வீடு கட்டுவதற்கு உகந்த 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு; க. கதிர்காமநாதன், வராம்பற்றை, கோப்பாய் வடக்கு, கோப்பாய். 9596

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கட்டைப்பிராய்ச் சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி இ. தம்பாபிள்ளை, கந்தையா உபாத்தியாயர்வீதி, கந்தரோடை, சுன்னாகம். 9484

யாழ். நகரில்- ஆட்டுகல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுகல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக்கர் அன்கோ, 112, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 9506

தேக்குத் தளபாடம் (Teak Drawing room suite with foam Cushions) விற்பனைக்கு உண்டு. 127, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டிக்குளி. 9558

மிகவும் நல்ல நிலையில் உள்ள டிலிக்கா 34 ஸ்ரீ தொடரில் 1976-ம் வருட மொடல் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 'மற்ற இல்லம்', அரசடி வீதி (சிமெந்துத் தொழிற்சாலை பிரதான வாயில் முன்பாக உள்ள வீதி), மாவிட்டபுரம் வடக்கு, தெல்லிப்பழை. 9568

கச்சேரி, தபாற் கந்தோர், பிரபல கல்லூரிகள் ஆகியவற்றிற்கு அண்மையில் வீடு கட்டு கட்டுவதற்கு ஏற்ற 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 64, கண்டி வீதி, சுண்டிக்குழி. 9569

## கல்வி

எதிர்வரும் 5-11-1983 தொடக்கம் சனி ஞாயிறுதினங்களில் 6, 7, 8, 9, 10ம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு புதிய முறையில் ஆங்கில போதனையும் (Applied Linguistic) அத்துடன் வெளிநாடு செல்லும் ஆண் பெண் இருபாலாருக்கும் ஆங்கிலப் பேச்சு (Spoken English) குறுகிய காலத்தில் பயிற்றப்பட்ட அரசாங்க ஆங்கில ஆசிரியரால் கற்பிக்கப்படும். விபரங்களுக்கு ஆசிரியர், இல. 67/12 டேவிற் றோட், குருநகர், யாழ்ப்பாணம். 9604

## தவறிவிட்டது

திரு. சு. ஜெயக்குமாரின் கடவுச்சீட்டு 20-10-83 இலிருந்து காணவில்லை. கண்டெடுத்தோர் தயவுசெய்து தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். மே/பா திருமதி சி. சுப்பிரமணியம், 'இறையகம்', கரவெட்டிகிழக்கு, கரவெட்டி. 9602

## வகுப்பு

வெல்டிங் குறுகியகால பயிற்சி வகுப்புகள் (செய்முறையுடன்) 2-11-83 ல் ஆரம்பமாகின்றன. முதல் பதிவு செய்யும் மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். யாழ் நகரில் கல்விப்பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேஒரு கல்லூரி. சர்வதேச புகழ் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். விபரத்துக்கு;- அதிபர், உயர்கலைக்கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9598

## தேவை

பற்சிகிச்சைநிலையம் அமைப்பதற்கு சனநடமாட்டம் கூடிய இடத்தில் வசதியான இடம் தேவை. வீட்டில் அல்லது Dispensary இன் ஒரு பகுதி அல்லது கடை என்றாலும் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல:9517, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9517

சிறந்த அழகும் நற்பண்புகளும் கல்வியறிவும் (D. A. M) சுயவருமானம் பெறும் றோமன் கத்தோலிக்க பள்ளர் இன 26வயதுடைய பெண்ணுக்கு அதே இனத்தைச்சேர்ந்ததகுதியான மணவாளன் தேவை. தகுதிக்கேற்ற சீதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 9601 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9601

அதிக வருவாயுள்ள ஒரு தொழிலில் முதலீடு செய்வதற்கு பங்காளர்கள் தேவை. எம். எஸ். எம். ஹுசைன் மீரான் புக்டிப்போ, 11/1ஏ.பி. லேன், சோனகத்தெரு, யாழ்ப்பாணம். 9606

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். டெலிபோன்: 23336. (9511)

மணமகன் தேவை. இந்து வேளாள குல மணமகளிற்கு 40-ல் இருந்து 45 வயதிற்கு உட்பட்ட மணமகன் தேவை. உயர்பதவியில்உள்ளோர் விரும்பப்படுகின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். முதற் கடிதத்தில் குறிப்புடன் சகல விபரங்களையும் அறியத் தரவும். விளம்பர இல: 9567 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9567

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/- ரூபாவுக்கு மேற்பட்ட பல விலைகளில் கோழிகளை நேரடியாக வந்து கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், Phone: 23131. (9551)

காவலாளி (Watcher) ஒருவர் உடன் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். ந. சந்திரசேகரம், இல: 6, கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம். (9583)

## FOR SALE

Doctor owned Lancer S/W 79/80 Model 12 Sri 8000 Series 44, Vidan's Lane, Chundikuli Jaffna. 9536

## TUITION

Individual Tuition CET Part I Contact: Sivananthan B Sc. Engineering 9/3, Kalaimakal Road, Thyiddy, Kankesanthurai. 9481

## WANTED

WANTED experienced registered Nurses, Midwives, immediately for private nursing home at Chavakachcheri. Apply on or before 05-11-83. Advertisement No. 9581 C/o The Eelanadu Ltd., Jaffna. 9581

## வகுப்புகள்

Pitman Shorthand and Typing (ENGLISH) வகுப்புகள் 02-11-1983 (புதன்) ஆரம்பமாகவுள்ளது. The Jaffna Education Centre, இராமையா செட்டியார் ஒழுங்கை, (ஆஸ்பத்திரி வீதிக் கிளை) யாழ்ப்பாணம். (சாந்தி சினிமாவிற்கு அண்மை) 9525

## சேவை

பாடசாலைப் பிள்ளைகளுக்கான மினி வான் போக்குவரத்துச் சேவை ஒழுங்குகள் செய்து தரப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்; ''பற்ஸ் பவர் எலக்றிக்கல்ஸ்'' 601, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24227. ''பற்ஸ் பிறின்ரேஸ்'' 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336. (9597)

## வாடகைக்கு

கே. கே. எஸ். றோட்டில் வாடகைக்கு கொடுப்பதற்கு தளபாடங்களுடன் நகைக்கடை ஒன்று நல்ல நிலையிலுள்ளது. தொடர்பு: வ. வயித்திலிங்கம் லிங்கம் எலக்றிக்கல் வெல்டிங் வேக்ஸ் 72/3 (புதிய இல 174) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 9582

## கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 15,000 வரையிலான சாக்குகள்கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா/25 மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திய ரூபா. 100/க்குரிய பற்றுச்சீட்டு இலக்கத்தையும் குறிப்பிட்டு 10-11-83க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் ''பொது முகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் கரவெட்டி'' என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக்கான கேள்வி'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி,
19-10-83. 9519

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

## தவறிவிட்டது

26 10 - 83 கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் எனது அடையாள அட்டை (317300719 V) யும் அத்துடன் பாங் அடவு துண்டும் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து தகவல் தரவும். சன்மானம் ரூபா 50/- தரப்படும் செ. பாலகிருஸ்ணசாமி 52. யாழ். றோட் யாழ்ப்பாணம். 9573

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

### சஞ்சீவ்

கல்வியங்காடு கலைமகள் வீதியிலுள்ள ஜெகதீஸ்வரன் கமலினி தம்பதிகளின் அன்புமகன் சஞ்சீவ் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (30-10-83) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, குமார் சித்தப்பா (பாரிஸ்) குட்டி சித்தப்பா, குஞ்சு சித்தப்பா, மாமிமார், மாமாமார், மச்சாள்மார், கலாமச்சாள் பெரியஅம்மம்மா, பெரிய அப்பப்பா, பெரியம்மாமார், பெரியப்பாமார், ராசு, அக்கா, மகேஸ் மாமி, அம்மம்மா, பேபி மாமி குடும்பத்தோர், பாலசிங்கம் மாமா குடும்பத்தோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அன்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். 9589

## NEW SCIENCE ACADEMY

திருநெல்வேலி

### A/L புதிய பிரிவுகள் ஆரம்பம்

பொது இரசாயனம் - 31 - 10 - 83 (4-30 p. m)
திரு. M. S. மணியம் B.Sc.
தாவரவியல் (84) 1 - 11 - 83 (3-45 p. m.)
9599 திரு. S. சர்வானந்தா B. Sc.

## Training in Para Medical Courses

- NURSING
- PHARMACY
- MIDWIFERY

Applications from students and Tutors close on 10th November 1983
Inquiries: C/o National Co-operative Council
Veerasingham Building
Jaffna.
Telephone: 23238

9607

## தமயந்தி அச்சகம்

### மானிப்பாய்

(மானிப்பாய் தபாற்கந்தோர்; M. P. C. S. முன்பாக)
உங்களுக்குத் தேவையான சகலவிதமான அச்சு வேலைகளையும்

- குறித்த நேரத்தில்
- மலிந்த கட்டணத்தில்
- சிறந்தமுறையில் செய்து கொள்ளலாம்

எங்கள் தயாரிப்புக்களான.
மொனிற்றேஸ் அப்பியாசக் கொப்பி
CR வரைதல் கொப்பி; கணக்குக் கொப்பி வகைகள்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்கலாம். 9580

# கிரனடாவிலுள்ள அமெரிக்க படைகள் விரைவில் வெளியேறிவிடும்!

## அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

### சோவியத் தூதரகத்தில் கியூபா, பல்கேரியா, வடகொரிய பிரஜைகள் அடைக்கலம்!

வாஷிங்டன், அக். 29

கிரனடாவை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கத்துருப்புகள் இன்னும் சில வாரங்களில் அமெரிக்காதிரும்பிவிடும் என்று அமெரிக்கப் பாதுகாப்பமைச்சு அலுவலகம் தெரிவித்தது.

கிரனடாவின் மலைப்பகுதிகளிலேயே தற்போது ஆக்கிரமிப்புப் படைகள் இருந்துவருவதாகவும், பெரும்பாலான கிரனடா கேந்திர நிலைகள் அமெரிக்க, கரீபியன் படைகள் வசம் இருப்பதாகவும் அது தெரிவித்தது. கடந்த வியாழக்கிழமையே அமெரிக்க, கரீபியன் துருப்புகள் கிரனடாவை ஆக்கிரமித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

கிரனடாவிலுள்ள சோவியத் தூதரகத்தில் வடகொரிய, கியூபா, பல்கேரிய, மற்றும் சோவியத் நாட்டு பிரசைகள் தஞ்சம் புகுந்துள்ளனர் என்றும், இவர்களைக் கண்டதும் அமெரிக்கப் படைகள் ஆச்சரியமடைந்தனவென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சோவியத் யூனியன் மாஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதுதரகத்துக்கு ஆட்சேபனையொன்றை வெளியிட்டுள்ளது அதில் கிரனடாவிலுள்ள சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த சோவியத் அதிகாரி ஒருவர் அத்தூதரகம் அமெரிக்கப் படைகளால் தாக்கப்பட்டபோது சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்துக்கான கிரனடா தூதுவர், பொதுநலவாய, அணிசேரா நாடுகளைச் சேர்ந்த அமைதிகாக்கும் படைகள் உடனடியாக கிரனடா சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டுமெனக் கேட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க கிரனடாவிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கும் சேதங்கள் பலமாகவிருக்கிறது. பலர் உயிரிழந்துள்ளனர். அநேகர் காயமடைந்த நிலையில் கிரனடா தலைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (கி)

## “ஐ. நா. வில் தி.மு.க. சமர்ப்பித்த மனு”

தொடர் கட்டுரை நாளை ஈழநாடு பத்திரிகையில் வழமைபோல் இடம்பெறும்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழாவை இன்று மாலை கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடவுள்ளது,

இவ்விழாவில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. விக்னேஸ்வரன் சிறப்புரையாற்றவுள்ளார்.

கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா வழங்கவுள்ளார்.

## நடைபாதை வியாபாரிகள் இடமாற்றம்: பொலிசார் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் பிரதான வீதிகளில் பொது மக்களுக்கும் பிரயாணிகளுக்கும் பெரும் இடையூறு விளைவித்துவந்த நடைபாதை வியாபாரிகள், போக்குவரத்துப்பிரிவுப்பொலிசாரால் யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நேற்றுத் தொடக்கம் சில இடங்களுக்கான மினி பஸ்களும் முற்றவெளிப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

முற்றவெளியிலிருந்து முறைப்படி யாழ். பஸ்நிலையப்பகுதிக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து பிரயாணிகளை கொண்டுசெல்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல்களை யாழ். பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவரும், வடபகுதி பொலிஸ்-பொதுமக்கள் தொடர்பு சபைகள் அமைப்பாளருமான சார்ஜன்ட் திரு. புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பண்டிகை, விசேஷ தினங்களில் யாழ். நகருக்கு நடைபாதை வியாபாரிகள் படை எடுப்பதால், பொதுமக்கள், பிரயாணிகள் நடமாட்டத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் குற்றச் சம்பவங்களும் நிகழ்வதற்கு இடமேற்படுவதைத் தடுக்கும் முகமாகவே யாழ். பொலிஸ் பகுதியினரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (மா)

## தென்சீன கடலில் அமெரிக்க கப்பல் மூழ்கியது: 81பேர்பலி!

பீங்கிங், அக், 29

தென் சீனக் கடலில் அமெரிக்க எண்ணெய்க் கப்பல் ஒன்று மூழ்கியதால் அதிலிருந்த 81 அமெரிக்கச் சிப்பந்திகளும் பலியானார்கள்.

கடந்த வாரம் இக்கப்பல் தென் சீனக் கடல் வழியே வந்ததைமட்டுமே அறிய முடிந்தது. பின்னர் அது திடீரெனக் காணமல்போனதுபற்றி அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலிலேயே இவ் அமெரிக்க எண்ணெய்க் கப்பல் தென்சீனக் கடலில் மூழ்கியிருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. இக்கடற் பகுதியில் வீசிய பலத்த புயற் காற்றினலேயே இக்கப்பல் மூழ்கியுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது இக்கப்பல் நீருக்கடியில் 300 அடி ஆழத்தில் காணப்படுகிறது. இதில் இருந்த 81 சிப்பந்திகளும் இதனுடனேயே நீருக்கடியில் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. சடலங்களை மீட்கும் வேலைகள் நடைபெறுகின்றன. (கி)

## பார்த்தசாரதியின் இலங்கை விஜயம்

புதுடில்லி. அக். 29

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியை இலங்கைக்கு வருமாறு இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அழைப்பு விடுத்துளளதாக இந்திய வெளிநாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திரு. பார்த்தசாரதியின் இலங்கை விஜயத்திற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படுமென்றும் அவ்வதிகாரி கூறினர்.

கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் திரு. பார்த்தசாரதி இலங்கை சென்று, அங்குள்ள தமிழ்த் தலைவர்களையும் மற்றும் அரசியற் கட்சித் தலைவர்களையும், அமைச்சர்களையும் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தமை தெரிந்ததே. (வெ)

## தி. மு. க. உறுப்பினர்கள் வெளிநடப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் படுகொலைசெய்யப் பட்டதைக் கண்டித்து தமிழ்நாடு சட்டசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் தி.மு.க. உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சபையிலிருந்து இருமுறை வெளிநடப்புச் செய்தனர்.

முதலமைச்சர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் சபையில் உரையாற்றிக்கொண்டிருந்தபோதே இவர்கள் குறுக்கீடு செய்து, வெளிநடப்புச் செய்தனர். (வெ)

## சிறந்த நிலையமாக தெரிவு

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல கமநலசேவை நிலையங்களிலும் அதிகலாபமீட்டிய நிலையமாக துணுக்காய் கமநல சேவை நிலையம் தெரிவுசெய்யப்பட்டதுடன் அதிசிறந்த நிலையமாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## “அகதிகள் முகாம்கள் மூடப்படமாட்டாது”

### உதவி ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

“யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்கள் வழமைபோல் இயங்கிவருகிறது. அம்முகாம்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலிடத்திலிருந்து எவ்வித பணிப்பும் கிடைக்கவில்லை” அகதிகள் முகாம்களின் எதிர்காலம் குறித்து யாழ். சமூகசேவைப்பகுதி உதவி ஆணையாளர் திரு. கெங்காதரனிடம் கேட்டபோது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தற்பொழுதும் சில அகதிகள் வந்து கொண்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 3 மாதகாலம் சமூக சேவைப்பகுதியினர், முகாம்களில் உள்ள சகல அகதிகளுக்கும் நிவாரணம் வழங்கிவருகின்றுர்கள். (க)

ரஸ்ற் ட்ரவல் சேர்விஸ்

11/A மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி ரோட்,
யாழ். நகர்
T. P. 24111

தலைமைக்கந்தோர்
65, சதாம் வீதி
ஹைதிராமணி ஆர்காட்,
கொழும்பு-1.

உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம். அதுவே எங்கள் ஸ்தாபனத்தின் பெயருமாகும்.

- ஏரோபுளட், செக்கோசிலவேக்கியாவிமானக் கம்பனிகளின் பிரதான ஏஜண்டுகளாக இருப்பதனுல் குறைந்த செலவுடன் விமான டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பிராக், பெல்ஜியம் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- குறைந்த கொமிஷனில் ரவலர்ஸ் செக் செய்து தரப்படும்.
- அதிகப்படியான மத்திய கிழக்கு டிக்கட்டுக்களில் 13½% கழிவு தரப்படும்.

பவர்ஸ் உரம்

இணையற்றது

MASTERS ABC 4/82 (8)

A B C

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

# வீரசந்நியாசி விவேகானந்தர்

செல்வி கிருஷ்ணாஞ்சலி பஞ்சலிங்கம்

இந்தியாவின் ஆத்மீகத் துறை வரலாற்றிலே 1863ம் ஆண்டு மறக்க முடியாத ஒரு ஆண்டாகும். இந்த ஆண்டில் தான் பிற்காலத்திலே விவேகானந்தர் என்ற பெயருடன் அழைக்கப்படப்போகும் நரேந்திரன் கல்கத்தாவில் பிறந்தார். பொங்கல் திருநாளன்று இவர் பிறந்தார். பொங்கல் திருநாளன்று இவர் பிறந்தது இந்தியாவின் ஆன்மீக ஞானம்

[ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் - யாழ்ப்பாணம், நடாத்திய கட்டுரைப் போட்டியில் கீழ்ப் பிரிவில் முதற்பரிசு பெற்ற கட்டுரை.]

தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த தூசி, களிம்பு எல்லாவற்றையும் நீக்கி மறுமலர்ச்சி பெற்று உலகிற்கு வழிகாட்டப் போகின்றது என்பதற்கு அத்தாட்சியாக அமைந்தது.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் என்ற அரும்புனலில் மூழ்கி அவர் எழுந்திராவிட்டால் இந்திய அறிவியல்வாதிகளில் ஒருவராக விளங்கியிருப்பாரே தவிர இந்தியாவின் ஆன்மீகத் தலைவராக விளங்கியிருக்க முடியாது.

அறிவுக் கனலாகிய நரேந்திரன் ஸ்ரீ இராமகிருஷ்ணர் என்ற தவமுனிவரின் தொடர்பினால் பண்பட்டு இயற்கையான கூர்மையான அறிவின் சக்தியை ஆத்மீகத் துறையை நோக்கித் திருப்பிக் கொண்டார். ஆரம்பத்திலே ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கும் விவேகானந்தருக்கும் உள்ள தொடர்பு குரு, சீடன் என்று அமையவில்லை. ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பார்த்துக் கிழவன் என்றே குறிப்பிட்டார். அடிக்கடி வினாக்கள் பல கேட்பார். இதற்கு மாருக ஸ்ரீ இராமகிருஷ்ணர், நரேந்திரன் தன்னிடம்வந்த காலம் தொடக்கம் தனது முதற் சீடன், தனது கொள்கைகளைப் பரப்பும் ஒரேயொருவன் வந்து விட்டான் என்று கூறி மகிழ்வார். நரேந்திரனிடம், தெய்வம் உண்டா? இல்லையா? இந்து மதம் சரிதானு? ஸ்ரீ இராமகிருஷ்ணர் புத்திசுயாதீனம் படைத்தவரா? என்ற சந்தேகங்கள் எழுந்தன. ஆனுலும் இரண்டு தத்துவங்களைப் பரிபூரணமாக ஏற்ருர். ஒன்று துறவு; மற்றது தூய்மை.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஏற்படுத்திய மறுமலர்ச்சி விவேகானந்தர் வாயிலாக இந்தியாவிலும், உலகெங்கிலும் பரவியது. விவேகானந்தர் என்ற சீடன் கிடைக்காவிட்டால் இந்தியாவின் மறுமலர்ச்சி காட்டாற்று வெள்ளம் போலத் திசை தெரியாது ஓடிப் பயனற்றுப் போயிருக்கும்.

விவேகானந்தர் தனது கருத்துக்களை நிரூபிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். அதில் இந்து மத தத்துவங்கள், புறச்சமயக் கோட்பாடுகள், மேற்கு நாடுகளின் தத்துவ ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஆகியன இடம்பெறும். கிறிஸ்து மதப் பாதிரிமார்களும் கூட இவர்களுடன் வாதிலே கலந்து இந்து மதத்தின் உயர்வைப்பற்றியும், தமது சமயத்தின் குறைவுகளைப் பற்றியும் அறிந்து கொண்டனர். பிற்காலத்திலே விவேகானந்தரின் வரலாற்றை எழுதியவர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ணரது அமுதத்தைத் தங்கக் கிண்ணத்திலே உலகிற்கு வழங்கினுர் என்பார்கள்.

## மூட நம்பிக்கையைத் தகர்த்தார்

இந்திய மக்களுக்கு இந்து மதத்தின் உயர்வைப்பற்றியும், அவர்கள் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளையும் களைந்தும் இந்துசமயத்திற்குப் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தினுர். விழாக்களும் கொண்டாட்டங்களும் மட்டுமே இந்து சமயம் என்றிருந்த மூடநம்பிக்கையைத் தகர்த்தெறிந்தார்.

மற்றைய சந்நியாசிகளுக்கும் விவேகானந்தருக்குமிடையே பெரிய வேறுபாடு காணப்பட்டது. ஆத்மீகத் துறையிலே ஈடுபடுவோர் தமது உடம்பையும் தமது உடல் நலத்தையும் பற்றி அதிக அக்கறை காட்டுவது தவறு. அப்படி அக்கறை காட்டுவதை இவர்கள் இகழ்ந்தார்கள். ஆனுல் விவேகானந்தர் உள்ளத் தூய்மையோடு உடல் நலமும் வேண்டுமென்றே கருதினுர். பலமற்ற உடம்போடும் நோயுற்ற உடம்போடும் ஆத்மீகப்பணி செய்ய முடியாது என்பது இவருடைய தீர்க்கமான நம்பிக்கையாகும்.

## அமெரிக்க பயணம்

கி.பி. 1893-ம் ஆண்டு விவேகானந்தர் அமெரிக்கா பயணமானுர். சிக்காக்கோவில் செப்டம்பர் மாதம் 11-ம் திகதி தொடங்கிய சர்வமத மகாநாட்டில் இவர் கலந்துகொண்டது இந்து சமயத்திற்கு ஒரு புதிய வாசலைத் திறந்து வைத்தது. வெளிநாட்டினர் இந்து மதத்தைப் பற்றிக் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தை இம்மகாநாடு நீக்கியது.

இந்துமதம் உலக வாழ்க்கைக்கு புறம்பானதல்ல என்பதை நிரூபித்தார். மற்றைய பேச்சாளர்களைப் போலல்லாது ''சகோதர, சகோதரிகளே'' என்று தொடங்கியவிதம் அனைவரையும் கவர்ந்தது. இந்து மதம் அமெரிக்க மேடையில் மேதை விவேகானந்தரால் பிரகடனப்படுத்தப்பட்டமையால் இந்தியாவில் சனுதனவேதாந்த மதம் வீறுகொண்டு எழுந்தது என லரலாற்று அறிஞர்கள் கருதுகிருர்கள். சுவாமிகளின் பயணம் இந்து மதத்தின் 'திக்' விஜயம் எனப்படும். இந்து மதத்தைப் பற்றித் தெளிவான கருத்துக்களை எடுத்துக் கூறினுர். சமய சமரசம் என்ற மகத்தான கொள்கை விவேகானந்தர் வாயிலாக உலகுற்கு பரவியது. எந்த மதத்தையும் கண்டித்திலர். எதனையும் பெரிது சிறிது என பாகுபடுத்தவில்லை. ஸ்ரீ இராமகிருஷ்ண பகவான் எந்தச் சத்தியத்தை நிலைநாட்ட அவதரித்தாரோ அந்த சத்தியமாகிய சமய சமரசத்தை விவேகானந்தர் உலகரங்கில் நிலைநாட்டியமை ஒரு மைல் கல்லாகும். இதுவே இவர் இந்து மதத்திற்கு ஆற்றிய மிகப்பெரும் பணிகளில் ஒன்று.

நான் ஒரு பரம்பொருள். எல்லா மக்களும் பரம்பொருள் எனவே எல்லா மக்களும் நானே என்ற அத்வைத சித்தாந்தத்தை உன்னிப்பாக உணர்ந்து அப்படிப்பட்ட மக்களின் பசியையும் வறுமையையும் நீக்கப் பாடுபடவேண்டிய மகத்தான பணிதான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் விவேகானந்தருக்கு இட்ட கட்டளையாகும். இக்கட்டளையை இம்மியளவும் தவருது நடத்தி முடிக்க விவேகானந்தர் தனது பிற்காலவாழ்க்கையைச் செலவிட்டார். இந்தப் பணியின் கொடியேற்று வைபவந்தான் இவர் சிக்காக்கோவில் நிகழ்த்தியபிரசங்கமாகும்.

சுவாமிகளின் பயணம் வெற்றிகரமாக முடிந்தது இந்து மதத்திற்கு புதிய நிலை ஏற்பட்டது. சுவாமிகளுக்குப் பலர் சீடர்களாயினர். இந்து மதம் அஞ்ஞானம் கொண்ட மிலேச்சர்கள் மதம் என்ற கூற்று முறியடிக்கப்பட்டது. கீழ் நாட்டு மக்கள் அறிவிலும் விவேகத்திலும் குறைந்தவர்கள் என்ற சான்றில்லாத அபிப்பிராயம் நொருக்கப்பட்டது. இதுவே இவர் இந்து மதத்திற்குச் செய்த மிகப்பெரும் பணிகளில் ஒன்ருகும்.

1902-ம் ஆண்டு ஆடி மாதம் 4-ம் திகதி இந்திய நாட்டின் உத்தம துறவி இறைவனடி சேர்ந்தார். பட்டப்படிப்பு படித்த நரேந்திரன் என்ற அறிவியல் வாதி குருமகாராசாவை அடைந்ததனுல் ஞானம் பெற்று சாத்திரம்படைத்தார். சாதனைகள் நிறைந்த அவருடைய வாழ்க்கையிலே பல புதிய சுவடுகள் தென்படுகின்றன. இந்து மதத்திற்கு மறுமலர்ச்சி பெற்றுத் தந்தார். இந்தியாவின் அடிமைத் தனத்தைக் கண்டித்தார். இந்தியத் துறவிகளுக்கு புதியவழி காட்டினுர். ''இந்தியாவை இனி யாராலும் அடக்க முடியாது. அது இப்பொழுது தூங்கும் நிலையில் இல்லை'' என்பது அவருடைய போர் முரசாகும்.

சந்நியாசி என்ற சொல்லுக்குப் புது அர்த்தம்கற்பித்தவர். சந்நியாசி என்பவன் கோழையல்லன் என்பதை நிரூபித்தார். துயரங்களைத் துடைப்பதே மக்களுக்குச் செய்யும் பணியென வாழ்ந்து காட்டிய அந்த வீர சந்நியாசி விவேகானந்தர் மீண்டும் வரவேண்டும் என்றும் இவ்வுலகம் காத்திருக்கின்றது.


SCIENCE ACADEMY

310, CLOCK TOWER RD., JAFFNA.

A/L 85பிரிவிற்கு பொது இரசாயனம்

ஆரம்பம் 05-11-83 சனிக்கிழமை

ஆசிரியர்-திரு. சத்தீஸ்

A/L84/85 வகுப்புக்களுக்கு

பௌதிக வகுப்புகள் நடைபெறுகின்றன

திரு. தவா, திரு.சிறிதரன் (வடபகுதி பிரபல ஆசிரியர்கள்)
திரு. சுந்தரமூர்த்தி (கொழும்பில் பிரபல ஆசிரியர்)

மாணவர்களின் நலன்கருதி மணியம் வெளிநாட்டுப் பயணத்தை இரத்துச் செய்துள்ளார். சகல வகுப்புக்களுக்கும் 05-11-83க்குள் சேர்ந்து பாடவிதானத்தை முழுமையாக முடிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

சயன்ஸ் அக்கடமி

310, மணிக்கூட்டு கோபுரவீதி யாழ்ப்பாணம்.



சன்யோ - சொனி - நஷனல் - பிலிப்ஸ் கறுப்பு - வெள்ளை
கலர் ரெலிவிஷன்கள்
ரூபா 2500/- முதல் ரூபா 14,500/- வரை.
இறக்குமதி செய்யப்பட்ட பூஸ்டர்கள்
ரூபா 250/- முதல் ரூபா 700/- வரை
சூர்யோன் அன்ரனு வகைகள் WHF
ரூபா 100/- முதல் ரூபா 875 வரை
மற்றும் றேடியோ, மணிக்கூடுகள் பல அன்பளிப்புப் பொருட்களுக்கும்

குறைந்த செலவில் நிலையான தெளிவான அன்ரனு அமைப்பிற்கு முன்னேடிகள்

சகல புதிய தமிழ்ப்பட வெளியீடுகளை வீடியோவில் பார்த்து மகிழ்வதற்கு சிற்றி வீடியோ கிளப்பில் அங்கத்துவம் பெறுங்கள்.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நியு சிற்றி றேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன். 24055


## — இலங்கை நிலைமை —

# மொறீஷியஸில் விசேடகருத்தரங்கு

போட் லூயி, அக். 29

இலங்கையின் நிலவரம் குறித்து விரைவில் மொறீஷியஸில் ஒருநாள் விசேட கருத்தரங்கை நடத்த மொறிஷியஸ் தீவுகளைச் சேர்ந்த றேஸ்ஹில் தமிழ் கோவில்கள்கூட்டவை முடிவு செய்துள்ளது.

இத்தகவலை கூட்டவையின் செயலாளர் திரு. ஜி. முத்தையன் அறிவித்துள்ளார்.

இலங்கைத் தீவில் வாழும் தமது தமிழ் சகோதர சகோதரிகளின் நிர்க்கதியான நிலையை மொறீஷியஸ் மக்களுக்கு உணர்த்துவதே மேற்படி முழுநாள் கருத்தரங்கின் நோக்கம் எனத் தெரிவித்திருக்கும் மொறீஷியஸ் தமிழ் கோவில்கள் கூட்டவையின் செயலாளர் திரு, முத்தையன் கருத்தரங்கைப் பொருளுடையதாக்கும் ஆவணங்கள், இலக்கியங்களை வெளிநாடுகளில் இயங்கிவரும் இலங்கைத் தமிழர்களிடம் இருந்தே எதிர்பார்ப்பதாகவும், உரிய நேரத்தில் அவை தமக்கு கிடைக்குமென்று நம்பிக்கையும் வெளியிட்டுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச மாநாடு ஒன்று மொறீஷியஸ் தீவின் தலைநகரான போட் லூயி நகரில் நடைபெற்றதன் பின்பு வெளிநாட்டுத் தமிழர் சம்பந்தமாக இப்படியான ஒரு முழுநாள் கருத்தரங்கு மொறீசியஸ் தீவில் இடம்பெறுவது இதுவே முதல்தடவையாகும். (க)

# கண்டி தமிழ் மன்னன் ராஜசிங்கனின் வாரிசுகளிடம் தமிழக அரசு வரலாற்று உண்மைகளைச் சேகரித்துள்ளது

## ஆங்கிலேயர்களினால் வேலூரில் சிறைவைக்கப்பட்டு மடிந்த அரசனின் சமாதியும் கண்டுபிடிப்பு

(சென்னை)

தமிழ்நாடு வேலூரில் இன்றும் வசித்துவரும் கண்டியை ஆண்டகடைசித்தமிழ்மன்னன் விக்கிரமராஜ சிங்கனின் வாரிசான பிரதிவிராஜாவிடமிருந்தும் அவரது பாட்டி சினேகலதா, தாயாரான அம்மாள் ஆகியோரிடமிருந்து தமிழ்நாடு இரகசியப் பொலிசார் பல வரலாற்று உண்மைகளையும் ஆதாரங்களையும் திரட்டியுள்ளனர். என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் மன்னன் விக்கிரம ராஜசிங்கன் பற்றிய உண்மையான தகவல்களையும் அதற்கான ஆதாரங்களையும் திரட்டுமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதை அடுத்தே சென்னை இரகசியப் பொலிசார் வேலூர் இரகசியப் பொலிசாரின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விக்கிரமராஜசிங்கன் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்ட பின்னர் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு வேலூர் சிறையில் 17 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டு அங்கேயே மரணமானார் என்பது போன்ற வரலாற்றுத் தகவல்களை தி!மு.க. தலைவர் திரு மு! கருணாநிதி அண்மையில் ஒரு கூட்டத்தில் தெரிவித்ததை அடுத்தே தமிழக அரசு மேற் சொன்ன நடவடிக்கைகளை மேற்கொண்டது.

திரு மு. கருணாநிதியின் தகவல்களை அடுத்து வேலூர் - பாலாற்றங் கரையிலுள்ள விக்கிரமராஜசிங்கனின் சமாதி அம்மன்னனின் வாரிசான பிரதிவி ராஜாவின் பேட்டி படங்கள் மன்னனின் மனைவி ராணிசாவித்திரிதேவியின்படங்கள் ஆகியன தமிழகத்திலிருந்துவெளிவரும் 'தினகரன்' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது.

இவற்றைத் தொடர்ந்து வேலூருக்குச் சென்ற பொலிசார் மன்னனினதும் அவனது குடும்பத்தினதும் சமாதிகளைப் பார்வையிட்டதுடன் சமாதிகளில் உள்ள குறிப்புகளையும் சேகரித்துக் கொண்டனர். சமாதிகளை படமும் எடுத்துக் கொண்டனர்.

## மண்கும்பான் கோஷ்டி மோதல் சந்தேக நபர்கள் பிணையில்

(ஊர்காவற்றுறை)

பொலிசார் முன்னிலையில் மண்கும்பானில் இடம்பெற்ற கோஷ்டிமோதலில் பலியானவர் மரணம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஏழு சந்தேக நபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மண்கும்பானில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் பலியான எஸ். மாணிக்கவாசகரின் மரணம் தொடர்பாக பொலிசாரினால் தேடப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரும் கடந்த திங்கட்கிழமை சரணடைந்ததைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம்வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்ட சோமசுந்தரம், வர்ணகுலசிங்கம் ஆகிய சந்தேக நபர்களும் பிணையில்நின்ற பரமேஸ்வரி, சின்னம்மா ஆகியோரும் சரணடைந்த ஐ. ஞானேஸ்வரன், ஐ. இராஜலிங்கம், ஞானலிங்கம், ஐ. அன்னலிங்கம் ஆகியோரும் நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. பாலவடிவேல் முன் ஆஜர்செய்யப்பட்டனர். முதலாம்எதிரியான ஐயம்பிள்ளை காயங்களுடன் சிகிச்சைபெறுவதால் ஆஜர் செய்யப்படவில்லை.

சந்தேகநபர்களை பிணையில் விடுமாறு அவர்களது தரப்பில் ஆஜரான சட்டத்தரணி என். சிறிகாந்தா கோரியபோது வழக்காளி தரப்பு சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் அதனை ஆட்சேபித்தார்.

சந்தேக நபர்களை தலா 2 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி வாரத்தில் இரண்டு தினங்கள் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடுமாறு பணித்தார். வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர். பி, சபாரத்தினம் சட்டத்தரணிகள் எஸ். அருள்சாகரன். ரி. லிங்கராசா ஆகியோரும் சந்தேகநபர்கள் சார்பில் என் சிறிகாந்தாவும் ஆஜரானார்கள். (கு)


# விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில் பாவியுங்கள் "பாயர்" உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய

## "சேர்கோப்பூர்"

450 மி. லீ.—55 ரூபா. 3.25 லீற்றர்—375 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) "ஹெடோனல் எம். 60%"
450 மி. லீ.—55 ரூபா. 2 லீற்றர்—240 ரூபா.

(2) "ஹெடோனல் எம். 40%"
450 மி. லீ.— 33 ரூபா 50 சதம்

(3) "ஹெடோனல் D. 55%"
250 மி. லீ.—55 ரூபா.

## ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.
தொலைபேசி: 93563.


## இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றங்கள்

(கண்டிக்குளி

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. ஆர். டி.சில்வா யாழ்ப்பாணம் தலைமையலுவலக இன்ஸ்பெக்டராகவும், காலி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு பீ. டீ. கே. கருணரட்ன சாவகச்சேரிக்கும், காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கே. ஆர். இராமச்சந்திரன் மாத்தறை தலைமைஅலுவலக இன்ஸ்பெக்டராகவும், கொழும்பு குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு பீலிக்ஸ் டீ சில்வா காங்கேசன்துறை பொலிஸ் தலைமை அலுவலக இன்ஸ்பெக்டராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தலைமை அலுவலக இன்ஸ்பெக்டர் திரு ஏ. பொத்தேஜ் ஏ எஸ். பியாக பதவி உயர்வுடன் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## இடிந்துவிழும் நிலையில் பாலம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப், மாதகல் பிரதான வீதியில் பாணவெட்டி முனியப்பர் ஆலயத்திற்கு பக்கத்திலுள்ள பாரிய பாலம் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. இவ்வீதியால் செல்லும் வாகனங்களும், மக்களும் பெரும் அச்சத்துடன் செல்கின்றனர்.

இந்த பாலத்தை விரைவில் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாதகல் விபுலானந்த சனசமூக நிலையம் யாழ். மாவட்ட நெடுஞ்சாலை திணைக்கள பிரதம பொறியியலாளரை கடிதமூலம் கேட்டுள்ளார். (சூ)

## கல்வி அமைச்சரை சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர் பிரச்னை தொடர்பாக கல்வி அமைச்சரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சந்திக்க ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வணசிங்கா, செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோர் கல்வி அமைச்சரைச் சந்திக்கவுள்ளனர். (க)


## நம்பிக்கையின் ஒளிவிளக்கு

நிலையான வைப்பிற்கு யாழ்நகரில் அதிஉயர் வட்டி வழங்கும் ஒரே நிறுவனம்.

"SHABRA"
ன்
உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம்

| மாதாந்தம் | 36 மாத கால முடிவில் |
|---|---|
| 100/- | 4,727/60 |
| 200/- | 9,455/19 |
| 300/- | 14,182/79 |
| 400/- | 18,910/38 |
| 500/- | 23,637/93 |

## 'SHABRA' UNICO FINANCE LIMITED

எம்மிடம் சுலபமான தவணை முறையில் வீட்டுப்பாவனைப் பொருட்களையும் மற்றும் மோட்டார் சயிக்கிள், துவிச்சக்கரவண்டி மோட்டார் வாகனங்கள், TV முதலியவற்றையும் குறுகிய காலத்தில் பெறலாம்.

★ புதிய தொழிலை ஆரம்பிப்பவர்கட்கு மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு உதவி ஆலோசனை முதலீட்டு உதவி செய்து கொடுக்கப்படும்,

## SHABRA

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு – 4.
தொலைபேசி இல: 589310.

207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22073

முதலிடம்பெற்ற கிராமோதய சபைக்கான

## பரிசுத் தொகையை உடன் அனுப்ப ஏற்பாடு செய்யவும்!

### யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர்

[பண்டத்தரிப்பு]

''கடந்த ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுமாவட்டத்தில் நடைபெற்ற சிறந்த கிராமோதயசபைக்கான போட்டியில் வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதயசபை முதலிடம்பெற்றது. இதற்கான பரிசுத்தொகை 10ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை. இப்பணத்தை விரைவில் வழங்கி உதவுக.''

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு, நா. க. தங்கரத்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார். இப்பரிசுத் தொகை நாட்டின் ஏனைய மாவட்டங்களில்வழங்கப்பட்டு விட்டதாகவும் யாழ். மாவட்டத்தில் இதுவரை வழங்கப்படாதிருப்பது கவலையைஅளிப்பதாக உள்ளது என்றும் இம் மகஜரில் திரு. தங்கரத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்மகஜரின் பிரதிகள் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. செந்தில்வடிவேல் ஆகியோருக்கும் அனுப்பிவைக்சப்பட்டுள்ளது.

---

## ''பனம் பொருள் அபிவிருத்தியில் ஆசிரியருக்கும் பங்குண்டு''

(புலோலி)

ஆசிரியர்களும் பனம் பொருள் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். பனம் பொருள் உற்பத்திகள் பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு போதித்து ஊக்கமளிக்க முடியும். ஆசிரியர்கள் பனம் பொருள் அபிவிருத்தித்துறையில் ஈடுபாடு காட்டுவதன் மூலமே வருங்காலச் சந்ததியினரும் சுதேச உணர்ச்சியுடன் பனை அபிவிருத்தியில் ஈடுபட்டுப் பனை வளத்தை பெருக்கமுடிவதுடன் எமது பொருளாதார வளத்தையும் மேம்படுத்த வழியேற்படும்.

இவ்வாறு கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடாத்தப்பட்ட பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் கண்காட்சியிலும் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு உரையாற்றிய பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. கே. நடராசா குறிப்பிட்டார். திரு. நடராசா தொடர்ந்து பேசுகையிம் குறிப்பிட்டதாவது:

பனம் பொருள் அபிவிருத்தியில் ஆசிரியர்களும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இதன் மூலம் ஆசிரியர்கள் பனம் பொருள் உற்பத்திகள் பற்றி மாணவர்களுக்குப் போதித்து ஊக்கம் அளிக்க முடியும். ஆசிரியர்கள் பனம் பொருள் அபிவிருத்தித் துறையில் ஈடுபாடு காட்டுவதன் மூலமே வருங்காலச் சந்ததியினரும் சுதேச உணர்ச்சியுடன் பனை அபிவிருத்தியில் ஈடுபட்டுப் பனை வளத்தைப் பெருக்க முடியும்' என்று திரு. க. நடராசா சொன்னார்.

தமிழக பனைவள நிபுணருமான திரு. கே. சம்பந்தரும் பேசினார்.

---

## தீவிர கண்காணிப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை அபிவிருத்திச் சபை உப அலுவலக எல்லைக்குள் உள்ள வர்த்தக நிலையங்கள்மீது பாவனைக்குதவாத பொருட்கள் விற்பனை செய்வது குறித்துத் தீவிரகண்காணிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைப்பதால் சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் பொருட்கள், கலப்படம் செய்யப்பட்ட பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள்மீது தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளக் காங்கேசன்துறை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்திகயாகத்தர் திரு. வ. இராமச்சந்திரனின் பணிப்புரையின்மீது காங்கேசன் துறை சுகாதாரப் பரிசோதகர் திரு. த. மகாதேவன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

---

## ராஜினமா

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில்இயங்கிவரும் தொழிற்சங்கங்களில் ஒன்றான ஜாதிக சேவக சங்கமயத்தின் பிரமுகரான கா. பாலசிங்கம் இத்தொழிற் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டதாக அறிவித்துள்ளார்.

---


யாழ். மக்களுக்கோர்

மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ்

(பிறைவேற்) லிமிட்டெட்

1. கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும், மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நோர்வேயில் (NORWAY) 1984–ம் ஆண்டிற்கான பாடசாலை அனுமதி பெறுவதற்கும் அது தொடர்பான சகல ஏற்பாடுகளுக்கும் உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA
PHONE: 22065, 22040

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

நகல் படிவங்களை;

1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3. சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?

Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-

1. Minolta PPC Photo Copier Model EP 300 78,590-00
2. Minolta PPC Photo Copier Model 300 RE 88,600-00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குறேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்)

படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக்கூடிய இடம்

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்



கண்கவர் மரத்தளபாடங்கள், பிரம்புத்தளபாடங்கள் ஸ்ரீல் தளபாடங்கள் (ஆர்பிக்கோ) முதலியவற்றிக்கு யாழ் நகரில் பிரபல்யம்மிக்க ஸ்தாபனம்!



★ LONG LIFE
★ BEAUTIFUL DESIGNS
★ VARIETY OF CHOICE
FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS




டில்கா பேணிச்சர் பலஸ்

DILKA FURNITURE PALACE 234,236,கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம். போன்: 24186

செற்றிகள் ரூபா 4700/- முதல் – அலுமாரிகள் 3500/- முதல் – கபினற்றுகள் 950/- முதல்

# சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பு உண்டா இல்லையா?

நா. மாணிக்க இடைக்காடர்

நான் யாழ்ப்பாணத்தில் சிறு பிள்ளையாயிருக்கும் பொழுது ஒரு கதை கேள்விப்பட்டேன்- ஒருவர் மேடையிலிருந்து பேசினார். எங்களிடம் ஏதாவது பொருள் மிதமிஞ்சியிருந்தால் அதே நேரத்தில் எங்கள் அயலில் யாருக்கும் இப்பொருள் தேவையாயிருந்தால் பங்கிட்டுக் கொள்ளுங்கள். என்று பேச்சாளர் முழங்கினார். ஒரே கரகோஷம் திருப்தியாக வீடு திரும்பினார். வந்ததும் வீட்டிலேயிருந்த நாற்காலிகள் சிலவற்றைக் காணவில்லை. மனைவியை வினவினார். அதற்கு மனைவியார் நானும் கூட்டத்திற்கு வந்தேன். நீங்கள் கூறியபடி மிதமிஞ்சிய சில நாற்காலிகளை அடுத்த வீட்டுக்காரருக்குக் கொடுத்துவிட்டேன் என்றார். இதற்குப் பேச்சாளர் கோபத்துடன் நான் கூறியது மற்றவர்களுக்கே உனக்கு நான் சொல்லவில்லையேயென்றாராம். மனிதரின் பலபிரச்னைகளில் இதுவும் ஒன்று அதாவது சொல்லுவதில் எவ்வளவு பங்கைச் செயலுக்குச் சொல்பவர் கருதுகிறாரென்று இதற்கும் ஒரு கல்குலஸ் (Calculus) தேவைபோலிருக்கிறது.

இன்னுமொரு உதாரணம் கூற விரும்புகிறேன்: பலஆண்டுகளுக்கு முன் ஒரு பாகாண அரசாங்க அதிபராக கடமை யாற்றினேன். அப்பொழுது ஒரு கிராமத்தில் தங்களுக்கு மது அருந்த தவறணை வேண்டுமென்று ஒரு சாராரும் வேண்டாமென்று இன்னுமொரு சாராரும்கேட்டார்கள். இதற்கு சட்டரீதியாக கிராமத்தில் வாக்கெடுக்க தீர்ப்பெடுக்கப்பட்டது. குறிப்பிட்ட தினமன்று எனது தலைமையில் அந்த கிராம வாசியாகிய ஒரு கச்சேரியில் லிகிதராக கடமை யாற்றியவரை எனக்கு உதவிக்கு கூட்டிக் கொண்டு கிராமத்திற்கு சென்றேன். தவறணை தேவையானவர்களே வாக்களிக்க வேண்டும். காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் நானும் எனது உதவியாளரும் குறிக்கப்பட்ட நிலையத்தில் சாத்திருந்தோம். ஒருவர் கூட வாக்களிக்க வரவில்லை. முடிவை நான் மக்களுக்கு சட்டமுறைப்படி பகிரங்கமாக கூறினேன்,

இதையடுத்து பலபேர் பேசினார்கள். இக்கிராம மக்களுக்கு பலகாலமாக மதுபானத்தில் வெறுப்பு இதை இவ்வாக் கெடுப்பு எடுத்துரைத்ததென்றார்கள். மறு நாள் என்னுடன் கடமையாற்றிய லிகிதர் கச்சேரிக்கு நேரத்துக்கு வரவில்லை தாமதமாக வந்ததும் என்ன காரணமென்று கேட்டேன். அதற்கு அவர் கிராமத்தில் முதல் நாள் இரவு பெரிய கொண்டாட்டம் நடந்ததாம் காரணம் தவறணை வேண்டாமென்ற தீர்மானத்தின் வெற்றிக்காக, ஆனால் லிகிதரின் முகத்தில் ஒரு சோர்வுதெரிந்தது. இதன் காரணமென்று கேட்டதும்கொண்டாட்டத்தில்தான் அதிகம் மதுபானம் அருந்தினேன்என்று கூறினார். வெளியுலகிற்கு மது விலக்கான கிராமமென்று பெயர் வாங்கவேண்டும் ஆனால் இரகசியமாக எவ்வளவும்குடிக்கலாம் இங்கே சொல்லுக்கும் செயலுக்கும் என்ன தொடர்பு நேர்மாறு தொடர்புதான்: ஆளையாள் ஏமாற்றுவதற்குச் சொல்லை ஒருகருவியாகப்பாவிக்கிறார்கள்.

வாழ்க்கையில் பல சொற்களைக்கேட்கிறோம். அந்தச் சொற்களுக்குச் சம்பந்தமில்லாத செயல்களைப் பார்க்கிறோம். கவலைக்காகிய நிலை இருந்தும் சோர்வடையத் தேவையில்லை. ஆங்காங்கே சொல்வதையே செய்பவர்களுமுண்டு. இதைப்பார்த்ததும் மனிதகுலத்தில் இன்னும் நம்பிக்கைவரும். நம்பிக்கை கொடுக்கும் சில சம்பவங்களைப் பார்ப்போம்.

இந்துசமயத்தில் எல்லாச் சமயத்தாலும் ஒரே கடவுளை அடையலாம் என்ற நம்பிக்கை உண்டு. பல நதிகள் எவ்விதமாக ஒரே கடலை அடைவது போல் எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளை அடையும்என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் பலமுறைகூறியிருக்கிறார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் நாங்கள் லண்டனில் சீவித்தோம். அப்பொழுது பம்பாய் பவன் தாபனத்தார் ஒரு கிளை தாபனத்தை லண்டனில் தாபித்தார்கள் (இத்தாபனம் பம்பாயிலும் மற்ற இந்திய நகரங்களிலும் இந்து சமயத்திற்கு பாடுபடுகிறது) இந்தக்கிளை தாபனத்தை அந்தக் காலத்து பிரிட்டிஷ் பிரதமர் கலஹன் திறந்து வைத்தார். திறக்கு முன் தாபனத்தை பவன் சார்பில் மொன் பாற்றன் பிரபு கலஹனை சுற்றிக் காட்டினார். கட்டிடத்தில் ஒரு சுவரில் சிலுவை யிருப்பதை கவனித்து 'கலஹன்' இது இங்கே எப்படி வந்தது? என்று கேட்டார் மொன் பாற்றன் விளக்கமளித்தார். இந்த இடத்தில் ஒருகிருஸ்தவ கோவிலிருந்தது. பவன் தாபனம் இந் நிலத்தை வாங்கி கட்டிடத்தை இடித்து இந்து தாபனத்திற்கு இணங்க கட்டிடம் வகுத்தார்கள். சிலுவையிருக்குமிடம் வரையும் இடித்து விட்டார்கள். சிலுவையை பார்த்தும் எம்மதமும் சம்மதமே என்று நாம் எவ்விடமும் பேசுவோமோ ஆகையால் எப்படி சிலுவையை உடைப்பது பிறகு சிலுவையை அப்படியே விட்டுவிட்டு மிகுதியை இடித்து கட்டிடத்தை பூர்த்தி செய்தார்கள். இதை மொன் பாற்றன் கூறிவிட்டு இந்த இந்திய நாகரிகமும் இந்து சமயமுமே இது போன்ற செயலை உலகில் செய்யக் கூடியவர்கள் என்று பெருமித்தார். என்னே இந்தச் செயல்! சொல்லும் செயலும் ஒன்று என்பதற்கு எவ்வளவு பொருத்தமான உதாரணம்.

இன்னுமொரு சம்பவத்தை கூறவிரும்புகிறேன், சில ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரில் தங்கியிருந்த பொழுது விமான நிலையத்திற்கு பொழுது போக்குக்காக சென்றேன், அப்பொழுது விமான நிலையத்தில் ஒரே பரபரப்பு. என்னென்று விசாரித்த பொழுது சிங்கப்பூர் பிரதமர் லீ வந்திருக்கிறார் என்றார்கள், ஆனால் ஏன் இந்த பரபரப்பு என்று விசாரித்த பொழுது பிரதமரை கண்டதும் நிலைய அதிகாரிகள் வி, ஐ. பி. (V,I.P.) அதாவது பிரமுகர்கள் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள், அவர் மறுத்துவிட்டார், தான் தனது மகனை லண்டனில் படிப்பதற்கு வழியனுப்ப வந்ததாகவும் தான் பிரதமராக வரவில்லையென்றும் பொதுமக்கள் எங்கே நின்று வழியனுப்புவார்களோ அதே யிடத்திலிருந்து வழியனுப்ப சென்று விட்டாரென்றும் கூறினார்கள். பிரதமர் லீ அடிக்கடி கூறுவார், 'கடமையில்லாத நேரங்களில் தான் ஒரு சாதாரண சிங்கப்பூர் பிரசை அவர் சொல்லும் செயலும் ஒன்றே,

இவற்றை பார்க்குமிடத்து சாதனையிலும் போதனையிலும் ஒற்றுமை கண்ட பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள் என்று அறிகிறோம். நாமே ஒற்றுமையையும் வேற்றுமையையும் தோற்றுவிக்கிறோம். இளமையில் வீட்டிலும் பாடசாலையிலும் சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றுமையை வற்புறுத்தினல் நல்ல சமுதாயத்தை உருவாககலாம். அப்பொழுது நாம் கேட்பதும் வாசிப்பதும் உண்மையென்றறிவோம். இல்லையேல் எதை நம்புவது எதை நம்பக்கூடாது என்றறிவதில் எங்கள் நேரம் போய் விடும். சொல்லுக்கும் செயலுக்கும் தற்பொழுது உள்ள இடைவெளியை எவ்வளவு குறைப்போமோ அப்பொழுது தான் நாங்கள் பண்புள்ள மக்களாக வாழ்வோம்:

## யாருடைய கடவுச்சீட்டு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் வசிக்கும் திரு. எஸ் முருகையா என்பவரால் முருகண்டியில்கண்டெடுக்கப்பட்ட கடவுச்சீட்டு ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலயநேரத்தில் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளலாம்.

## கவாஸ்கரின் உலக சாதனை

புதுடில்லி அக் 29

அவுஸ்திரேலியாவின் பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரரர் சேர் டொனல்ட் பிரட்மன் ஏற்படுத்திய ''29 சென்சரி'' உலக சாதனையை சுனில் கவாஸ்கர் எட்டிப் பிடித்துள்ளார். அத்துடன் 8000 ஓட்டங்களையும் அவர்எடுத்துள்ளார்.

இந்தியா தனது முதல் இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை 299 ஓட்டங்களை எடுத்திருந்தது. சுனில் கவாஸ்கர் 121 ஓட்டங்களை எடுத்தார். டிலிப் வென்சாகர் 114 ஓட்டங்களுடனும், ரவி சாஸ்திரி 23 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். கைக்குவாட், யக்ஸ்பால் சர்மா 5 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.


(சு)

## ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

இருபாலை சைவபரிபாலன சங்கத்தின் 30 வது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை கற்பக விநாயகர் ஆலயத்தில் சங்கத் தலைவர் திரு. க. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

## பதவி உயர்வு



யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வண்ணார்பண்ணை தென்-கிழக்கு (பெரியகடை பகுதி) கிராமசேவை அலுவலர் திரு. வை.கா. தளையசிங்கம்அவர்கள் முதலாந்தர கிராமசேவைஅலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார். புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாசாலை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் 1958ம் ஆண்டில் பொது எழுதுவினைஞராக அரசாங்க சேவையில் சேர்ந்து கைத்தொழில் இலாகா, உள்நாட்டு இறைவரித்திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றிய பின் 1963ல் கிராம சேவையாளர் சேவையில் சேர்ந்து அல்லைப்பிட்டி, சரவணை, கோண்டாவில் ஆகிய பகுதிகளில் கடமையாற்றியபின் தற்போதைய பிரிவில் கடந்த பதினொருவருடங்களாக கிராம சேவை அலுவலராக கடமை யாற்றி வருகின்றார். இவர் புங்குடுதீவு மேற்கு திரு. வைத்திலிங்கம் காசிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும். காலஞ்சென்ற ஆசிரியர் திரு. சு. சபாரத்தினம் தம்பதிகளின் மருமகனுமாவார்.

## யாருடையது

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரால் வீதியில் பணத்துடன் கண்டெடுக்கப்பட்ட கைப்பை ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

0 0 0

வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் ஒரு மோட்டார் சைக்கிள் திறப்பை திரு. சி. கந்தசாமி எஸ்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


விவசாயிகளே !

BAYER

மோருட் 80% W. P. (Morut)

விலை: 20 கிராம்ஸ் ரூபா 10-00 100 கிராம்ஸ் ரூபா 40-00.

பயிர்களைத் தாக்கும்

அடி அழுகல், வேர் அழுகல், விதைகள் மூலம் பரவும் பூஞ்சண நோய்களையும் சிறப்பாகக் கட்டுப்படுத்தும் 'மோருட்' பாவித்து சிறந்த பலன் பெறுங்கள்.

இது பலவருடங்களாக உங்களுக்கு சேவையாற்றும்

''பாயர்'' தயாரிப்பு

போமசொல் போட்டே (Pomosol Forte)

விலை: 100 கிராம்ஸ் ரூபா 15-00

மிளகாய் மற்றும் காய்கறி நாற்றுமேடையில் ஏற்படும் அடி அழுகல், பயிர் அழுகல் போன்ற பூஞ்சண நோய்களை சிறப்பாகக் கட்டுப்படுத்தும் மற்றுமோர் சிறந்த ''பாயர்'' தயாரிப்பு.

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு—10.

த. பெ. இல: 70.

# வடமுனை

பா. அனந்தகிருஷ்ணன்

ஜீப் வண்டியில் சகலரும் ஏறிக் கொண்டோம். மழை பலமாகவே இருந்தது. உள்ளே இருந்தவாறே பேச்சைத் தொடரலானோம்.

### 5000 கொட்டில்களுக்கு மேல்

ஆரியவிடம் வடமுனையில் போடப்பட்டுள்ள கொட்டில்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருக்குமெனக் கேட்டேன். அவர் தமக்கு அது பற்றிச் சரியாகத்தெரியாதென்றதுடன் ஆயிரக்கணக்கிலேவே அவை இருக்க வேண்டுமென்

[4]

றார். அப்போது என்னருகிலிருந்த நண்பர் சாம், தமக்குக் கிடைத்த அறிக்கையொன்றின்படி சுமார் 5000 கொட்டில்களுக்கு மேல் போடப்பட்டிருப்பதாகக் கூறினர்.

''மகாவலி அதிகார சபை உட்பட சில அரச திணைக்களவாகனங்கள் வடமுனைப் பகுதியில் அத்துமீறலுக்காகப் பாவிக்கப்பட்டதை அறிந்தேன். இதுபற்றிஏதும்கூறுவீர்களா?'' என்று ஆரியவிடம் கேட்டேன்.

''அத்துமீறல் குடியேற்றங்கள் நடந்த ஆரம்பத்திலேயே மகாவலி அதிகாரசபை வண்டிகள், மற்றும் சில திணைக்கள வண்டிகள் இங்கு அத்துமீறல் காரர்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுக் கொடுத்துதவின. மலேரியா நோய் தடுப்புப்பிரிவினரும் இங்கு மருந்து தெளிக்கும் வேலைகளில் இறங்கியிருந்தனர்'' என்றார்.

## ★ 5000க்கும் அதிகமான கொட்டில்கள் போடப்பட்டுள்ளன!

## ★ லொறிகளில் கிடுகு விநியோகம் மும்முரம்!!

நாம் கதைத்துக் கொண்டிருந்தபோது எமது வண்டியைத் தாண்டி லொறியொன்று சென்று கொண்டிருந்தது. அதில் கிடுகு ஓலைகள் பெருமளவில் காணப்பட்டன.

''வடமுனைக்கு புதியவர்கள் வந்த பின்னர் கிடுகு வியாபாரம் இங்கு மும்முரமாக இருக்கிறது. தனியார் லொறிவண்டிகள் தினமும் கிடுகுகளை இங்கு கொண்டுவந்து விநியோகித்து வருகின்றன'' என்றார் ஆரிய.

### ஓநாய்க் குகையிலிருந்து மீண்ட உணர்வு

நேரம் ஆறு மணியாகியிருந்தது மழை இருள் காட்டுப் பகுதியை மெதுவாகச் சூழத் தொடங்கியது. ஆரிய வண்டியைக் கிளப்பச் சொன்னர். மழையின் வேகம் அதிகமானல் மதுறுஓயா நீர்மட்டம் உயர்ந்துவிடுமென்றும், பின்னர் அதைத் தாண்டுவது சிரமமாக இருக்குமென்றும் கூறினர்.

நண்பர் சாம் ஜீப்பை சேறும் சகதியுமான அந்த சீரற்ற பாதையில் ஒருவாறு வெட்டித் திருப்பினர். தொடர்ந்து மதுறு ஓயாவை அடைந்தோம். நீரின் வேகமும், உயரமும் சற்று அதிகரித்தே இருந்தது.

நண்பர் சாம் ஜீப்பைச் சற்றுப் பின்புறம் கொண்டு சென்று பின்னர் மிகவேகமாக ஆற்றிறுள் அதனை இறக்கி, இறக்கிய வேகத்திலேயே வடமுனைக்கரையைத் தாண்டினர்.

இதனல் ஜீப்பின் உள்புறமும் நீர்புகுந்து வடிந்தது. ஆனல் நாம் எல்லோரும் ஒரு ஓநாய்க் குகைக்குச் சென்று பக்குவமாக உயிர் தப்பிய உணர்வுடன், வடமுனைக் கரையை மீண்டும் ஒருதடவை திரும்பிப்பார்த்து விட்டு வெலிக்கந்தையை அடைந்தோம்.

இளைஞர் ஆரிய வடமுனை அத்துமீறல் பகுதிக்கு அழைத்துச்சென்று எமக்கு வேண்டிய விளக்கங்களையெல்லாம் தந்தார். அவர் அக்குடியேற்றத்தை ஆதரித்தே சிலவற்றை எனக்கு விளக்கினர். ஆயினும் அக்குடியேற்றத்தை எதிர்த்து நான் கொண்டிருந்த முரண்பட்ட கருத்துக்களையும் அவர் ஏற்று பெருமனதுடன் எம்மை வழியனுப்பிவைத்தார்.

### புனானை, மாதவனை

மட்டக்களப்பை நோக்கி வந்துகொண்டிருக்கும் போது மட்டக்களப்பு அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சருக்கு வடமுனை அத்துமீறல் குடியேற்றம் பற்றி சமர்ப்பித்த அறிக்கையைப் படித்தேன்.

அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதவனை என்ற இடத்திலும் அத்துமீறல் குடியேற்றம் மும்முரமாகஇருக்கிற தென்று அவர் குறிப்பிட்டிருந்தார். இப்பகுதியில் 5000 ஏக்கர் நிலம் சுமார் 5000 அத்துமீறல் காரர்களால் கைப்பற்றப்பட்டிப்பதையும் அவர்சுட்டிக் காட்டியிருந்தார்.

இத்துடன் புனானை என்னுமிடத்திலும் 35 ஆக இருந்த அத்து மீறல் குடியேற்றம் 50 ஆக உயர்ந்துள்ள தென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

(மிகுதி நாளை வரும்)

## தமிழக மேலவையிலும் கண்டனத் தீர்மானம்

சென்னை, அக். 28

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டிக்கும் தீர்மானமொன்று நேற்றுத் தமிழ் நாடு சட்ட மேலவையிலும் கொண்டுவரப்பட்டது.

இத்தீர்மானத்தைத் தமிழ் நாடு செய்தி, அறநிலைத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சார்பாகக் கொண்டுவந்தார். (வெ)


புதிய லக்ஸ்பிறே 500



100 கிராம் மேலதிகம்.

500 கிராமிற்கான விலையோ 26/00 சதம் மட்டுமே. செறிவும், செழுமையும் மிகுந்தவாய்ப்பாடு
புதிய லக்ஸ்பிறே (26% பாற் கொழுப்பு நிறைந்தது)

★ ஈரலிப்பு, துர்நாற்றம், பக்றிரியாத்தாக்கம் என்வற்றைத்தடை செய்யத்தக்க முப்படைகளான பையில் அடைக்கப்பட்டு வெளிவருகிறது.

★ நைதரசன் வாயுவுடன் சேர்ந்து அடைக்கப்படுவதால் நீண்ட காலச் சேமிப்பிற்கு உகந்தது.
தீவு பூராவும் தாராளமாகக் கிடைக்கிறது.

எடை போட்டுப் பார்க்க சிலஉண்மைகள்.

சந்தைப்படுத்துவோர்
லங்கா மில்க் ஃபூட்ஸ் (சீ.டப்ளியூ.ஈ) லிமிட்டெட்.
வெலிசர, முகம, இலங்கை

ZENITH

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.30, 4-45, 7-00,
Clint Eastwood in
ANY WHICH WAY
YOU CAN
(Color)
Action Thrill

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
கீழ்வானம் சிவக்கும்

1-11-83 வரை
**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

இன்றுமட்டும்
**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்
31- 0-83 முதல்
வசந்த மாளிகை

இன்றுமட்டும்
**ராஜா** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)
31-10-83 முதல்
வீரக்கனல்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
M.G.R. - சரோஜாதேவி
அன்பே வா
கலர் — புதிய கொப்பி
From 1-11-83
"IT COULD HAPPEN TO YOU"
A Film on V. D.

**வின்ஸர்** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30 6-15
கலைஞர் கருணாநிதி அவர்களின் கைவண்ணத்தில் உருவாகி முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களின் ஒப்பற்றநடிப்பால் ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற உன்னத தீந்தமிழ் திரையோவியம்
எம். ஜி ஆர். - பத்மினி
நம்பியார்
தங்கவேலு - ராஜசுலோசனா
நடித்த
அரசிளங்குமரி
(புத்தம் புதிய பிரதி)

**ரீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Last few days. No more extension. Film withdrawn by the Film Corporation. DOGS OF WAR You can NEVER see this film again.
* கடைசி சில தினங்கள். * மேலும் நீடிக்கப்படமாட்டாது. * திரைப்பட கூட்டுத்தாபனம் இப்படத்தை திருப்பி அனுப்பும்படி அறிவித்திருக்கிறது. * உங்களால் ஒருபோதும் இப்படத்தை திரும்பவும் பார்க்கமுடியாது.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR


யாழ். மாவட்ட

# கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளியின் பின் யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே, வருடாந்தம் நடைபெறும் சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் அடுத்தமாதம் 3-ம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரிகளிடையே முதலாவது உதைபந்தாட்ட மோதலில் சென், ஜோன்ஸ் கல்லூரியும், சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதுகின்றன.

மேற்படி இரு கல்லூரிகளுக்குமிடையிலான போட்டி அடுத்த மாதம் 3-ம் திகதி. சென், பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 9-ம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மோதவிருக்கிறது.

இப்போட்டியின் பின் சென். ஜோன்ஸ் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன், யாழ்ப்பாணத்தில் மோதவிருக்கிறது.

## சென். பற்றிக்ஸ்

இம்முறை சென். பற்றிக்ஸ் கல்லூரி, மொத்தம் ஆறு போட்டிகளில் மற்றைய கல்லூரிகளுடன் மோதவுள்ளது.

(வி)

MR. and MRS. N. SATCHITHANANTHAMOORTHY
together with
MR. and MRS. A. SOMASUNDARAMPILLAI and
MR. and MRS. N. SIVARAJAH

thank all relatives and friends who attended their wedding and sent congratulatory messages.

9603

## 90-வது நாள் நினைவு

ஆ. பேரின்பநாயகம் (இன்பம்)



உதயம்:

7 - 6 - 49

அகால மறைவு:

29 - 7 - 83

நினைக்கும் தோறும் நிலைகுலையுதே
நின்வதனம் தோற்றுங்கால் தலைசுழல் பம்பரமாகுதே
நின் அன்னை நித்தம் தலைவிரிகோலமே
நின் முன்பின் யோசனையற்றதால் வந்ததே
நிற்கதி உந்தனுக்கே
நின்னை நீசர் எம்மாதிரி வதைத்தனரோ
நினைக்க நெஞ்சம் கொதிக்குதே (9595)

பெற்றோர், சகோதரங்கள்.


**லிடோ** யாழ் நகர்
தினசரி
10-30, 2-15, 6-30
விடியும்வரை காத்திரு

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15 6-30
கமல்
ஸ்ரீதேவி குரு
7 11-83 முதல்
36th CHAMBER OF SHAOLIN

இன்னும் 4 தினங்கள்
மட்டும்
**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
"RAID ON ENTEBBE"
in
Operation Thunderbolt
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.

# VACANCIES

கிழக்கானும் துறைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

1. Welders ஒட்டுனர்
2. Fitters பொருத்துனர்
3. Tinkers உலோக வேலையாளர்

Promoters Engineering Company Ltd.
844, POINT PEDRO ROAD,
NALLUR, JAFFNA. (9520)

வடமராட்சி மாணவர்க்கோர் நற்செய்தி !!
SPECIALLY FOR SCHOOL LEAVERS
FIRST TIME IN POINT PEDRO
at SCIENCE CENTRE
DIPLOMA IN
Computer Programming
காலம் :- 5 மாதங்கள்
பாடநெறி :
BASIC-COBOL-R.P.G. I & II
ஆரம்பம் : 5-11-83
விபரங்களுக்கு :- நேரில்/தபாலில்
SCIENCE CENTRE
PONNUCHAMY KODDAM,
Point Pedro.
9301

கலர் புகைப்படங்களை
குறைந்த செலவில்
குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.

இதோ! யாழ். நகர மக்களுக்கோர்
நம்பகரமான புதிய செய்தி!!



சிறந்த சேவையாற்றும்
அற்லஸ்
ரெலிவிஷன்
14'' கறுப்பு
வெள்ளை
ரூபா 2,250/-
மட்டுமே!
ஒரு "ரூ இன் வன்"
(TWO IN ONE விலைக்கு இது சமமானது)
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.

கிடைக்குமிடம்:
இப்ராஹிம் ஜபார்ஜி, லக்ஷ்மி ரேட் சென்ரர்

இல: 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன்: 22409

இல: 17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன்: 23854

எடுத்துச் செல்லுங்கள்! எங்களது மகத்தான சேவை மூலம்
உங்கள் பிரச்னைகளை 24 மணி நேரத்தில் தீர்க்கலாம்!!

ஏனைய மாவட்டங்களில் விநியோகஸ்தர்கள்:
மக்ஸ்வோல் என்ரபிறைஸஸ்,
150, சென். ஜோசப் வீதி, கொழும்பு - 14. (9570)

### "வெவ்வேறு பகுதிகளில் வாழும்

# அனைத்து மக்களும் உரிமை பெற்றவராக வாழவேண்டும்"

## டாக்டர் கொல்வின் கூறுகிறார்

(கொழும்பு)

''இன்றைய அரசு திருகோணமலையை அமெரிக்காவிற்குத் தாரை வார்த்துக் கொடுக்க முனைகிறது, எம் நாட்டை வேறு நாட்டுக்கு அடகுவைத்து அரசியல் பாதுகாப்புப்பெறுவதற்கான ஒரு சூழ்நிலையை இன்றைய அரசு உருவாக்கியுள்ளது''

இவ்வாறு லங்கா சமசமாஜ கட்சித்தலைவர் கலாநிதிகொல்வின் ஆர். டி சில்வாகொழும்பு புதிய நகரமண்டபத்தில் 'இலங்கைஎங்கேநோக்கிச்செல்கிறது?'என்னும்தலைப்பில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இன்று ஆயுதப்படையின் உதவியுடன் இந்நாட்டில் ஒற்றைஆட்சி முறைநிலைநாட்டப்படுகிறது.

''ஒரு நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் வாழும் அனைத்து மக்களும் உரிமை பெற்றவர்களாக வாழவேண்டும். அதேவேளை இவர்களுக்கிடையே ஒற்றுமை நிலவவேண்டும். இவ்வாறு வாழும் மக்களின் ஒத்துழைப்பு மூலமே ஒற்றை ஆட்சி முறையை நிலைநாட்டலாம்.

''இந்நாட்டில் ஆயுதப்படை மூலம் ஒற்றை ஆட்சி முறை நிலைநாட்டப்பட்டு வருகிறது. அரசாங்கமே இவ்வித நிலையைத் தோற்றுவித்துள்ளது.

''ஐ. தே. கட்சிக்குள் பேத, பிரிவினைகள் தலைதூக்கிவிட்டன. ஓர் அமைச்சர் பிறிதொரு அமைச்சரின் கருத்துகளுக்கு முற்றும் முரண்பாடாகப் பேசுகிறார் ஒவ்வோர் அமைச்சரும் தனித்தனியாக லொத்தர் சீட்டிழுப்பு வைத்திருப்பதன் மூலம் இது தெளிவாகிறது.

''ஆயுதப்படையினரின் செயற்பாட்டிலும் முரண்பாடு நிலவியுள்ளது. ஆயுதப்படைகளிடம் முதன் முதலாக இப்போது அரசியல் புகுந்துள்ளது.

''கலவரங்கள் தலைதூக்குவதற்கு முன்னரே ஆயுதப் படை வீரர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள். இதற்கு முன்னர் ஆயுதப்படையினர் அரசுகளுக்குப்பணிந்தே செயற்பட்டுவந்தார்கள். இப்போது அந்த நிலைமை இல்லை.

''குழப்பங்களைக் கட்டவிழ்த்து விட்டதாகக் குற்றஞ்சாட்டி அரசுக்கு வெளியேயுள்ள கட்சிகளுக்கு அரசு தடைவிதித்துள்ளது.

''ஆயுதப் படையினரின் முரண்பாடான செயல்களுக்காக இதுவரை எந்த ஆயுதப் படை வீரரும் சிறைவைக்கப்படவில்லை.

''90 வீதமான தோட்டப்புற தமிழ்மக்கள் இன்றைய அரசுக்கே வாக்களித்தனர். இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் நாட்டில் மூன்று தடவைகள்தலைதூக்கிய இனக்கலவரங்களால் தோட்டப் பகுதி தமிழ்மக்களை பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்'' என்றார். (வெ)

---

## பகவத்கீதைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சுவாமி தத்வானந்தஜியின் பகவத்கீதைப் பேருரை, நல்லூர் கோவில் வீதி 69-ம் இலக்க இல்லத்தில், ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமைகளில் மாலை 5-30 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

---

## லயன்ஸ் உதவியுடன் தையல்வேலை

(யாழ்ப்பாணம்)

கலவரத்தினால் இடம்பெயர்ந்து வந்த தையல்வேலை தெரிந்த சிலருக்கு யாழ். லயன்ஸ் கழகம் வேலைவாய்ப்பு செய்துகொடுத்துள்ளது.

இவர்களுக்கு தையல் யந்திரங்களும் வாங்கிகொடுத்து யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள கில்னர் கட்டிடத்தில் இடவசதியும் செய்துகொடுத்துள்ளது.

இவர்களுக்கு பொதுமக்கள் தையல் வேலைகளை கொடுத்து உதவ வேண்டும் என்று லயன்ஸ் பிரமுகர் ஒருவர் கேட்டுக்கொண்டார்.

---

## கண்காட்சி இன்றும் நடைபெறுகிறது

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் வதியும் அகதிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இக்கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ளதாக பொருட்காட்சியை ஏற்பாடு செய்த அறவழிப்போராட்டக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

---

## கடத்தல் பொருட்கள் சிக்கின

(மாவிட்டபுரம்)

வல்வெட்டித்துறை பொலிசார் 36 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட இருநபர்களையும் கடத்தல் பொருட்களை பொலிஸ்சார்சுங்கப்பகுதியினரிடம் கையளித்துள்ளார்.

---

## இனக்கலவரத்தால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர் இணைப்புக்குழுத் தலைவர் திரு. கே. இராஜசிங்கம் தெரிவித்தார்.

இவ் இடமாற்றப் பட்டியல்களைத் தயாரிக்கும் பொறுப்பு இணைப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் அவ்வத் திணைக்களங்களினதும், கூட்டுத்தாபனங்களினதும் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ள அரசாங்க, அரச கூட்டுத்தாபன ஊழியர்களை அவ்வக் குழுவுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்கக் கொடுக்கும்படி பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு கேட்டுக் கொள்கின்றது,

---

## உள்நாட்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போய்விடுகிறார். ஆனால் சும்மா இருக்கவில்லை. தெருவிலுள்ளவர்களிடமெல்லாம் அந்த வீட்டில் நடக்கும் அக்கிரமத்தைப் பற்றிக் கூறுகிறார். அநீதி இழைக்கப்படுபவர்கள் வீட்டுக்குள் நடப்பவற்றை அம்பலப்படுத்துகிறார்கள். இச்செய்தி ஊரெங்கும் பரவுகிறது. எல்லோருமாகச் சேர்ந்து காவல் நிலையத்துக்குச் சென்று முறையிடுகிறார்கள். காவல்துறையினர் விசாரிக்காமல் விடுவார்களா?

வீடுதான் நாடு. உள்வீட்டு விவகாரம் என்று அண்டை வீட்டுக்காரரை அடக்கி வைக்கலாம். ஊரை அடக்க முடியாது.

அதேபோல் உள்நாட்டு விவகாரம் என்று அண்டை நாட்டைமிரட்டலாம். ஆனால், மனித சமுதாயத்தின் வாயை அடைத்துவிட முடியுமா?

அரசியல் நடைமுறைகளிலும் சமூக மாற்றங்களிலுல் பொருளாதாரக் கொள்கைகளிலும் உள்நாட்டு விவகாரம் என்று உரிமை கொண்டாடலாம். ஆனால் அடிப்படையான உரிமைகளை மீறி குடி மக்களின் ஒரு பகுதியினரை நசுங்கச் செய்து கொண்டு எந்த ஆட்சியும் உள்நாட்டு விவகார போர்வைக்குள் ஒளிந்து கொண்டுவிடமுடியாது.

---

## எம்மை அகற்றும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள பெரியோர்களும் உணர்ந்து எமக்கு உதவமுன் வரவேண்டும்.''

இவ்வாறு பாஷையூர் பிரசவவிடுதி வளவில் குடிசை அமைத்து குடியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த பல பெண்கள் எமது அலுவலகம் வந்து தமது நிலைகுறித்து கண்ணீருடன் புகார் தெரிவித்தனர்

அவர்கள் தமது புகாரில் தெரிவித்துள்ளதாவது:-

''எமது சொந்த இடம் பாஷையூர்தான். அண்மையில் நாம் குடியிருக்கும் பகுதிக்கு வந்த மாநகரசபை ஊழியர்கள் பொலிசாரின் உதவியுடன் சில குடிசைகளைப் பிடுங்கிவிட்டு அதன் ஓலைகள், தடிகள் ஆகியவற்றைக் கொண்டு சென்றுவிட்டனர். அவற்றைத் திருப்பிப்பெற அவர்கள் மேற்கொண்ட முயற்சியும் வீணாகிவிட்டது.

எமது குடிசை வீடுகளை அகற்றவும் வந்தார்கள். நாம் தடுத்தபோது மீண்டும் வருவதாகக் கூறிச்சென்றார்கள்.

ஏற்கனவே அகற்றப்பட்ட வீடுகளைச் சேர்ந்தவர்களும், அகற்றப்படாத வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். மழைகாலம் ஆரம்பித்துவிட்ட இவ்வேளையில், எம்மை வெளியேற்றினால் நாம் என்னதான் செய்யமுடியும்.

கடந்த ஜூன் மாதத்தில் எமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறுமாறும் 14 நாட்களுக்குள் வெளியேறாவிட்டால் வழக்குத் தொடரப்படுமென்றும் மாநகரசபை அறிவித்திருந்தது. எதுவுமே செய்ய முடியாத நிலையில் நாமும் வாழ்க்கையை எதிர்நோக்கத் தயாரானோம். ஆனால் அண்மையில் திடீரென வந்த சபை ஊழியர்கள் சிலரை வெளியேற்றிவிட்டனர். எம்மை வெளியேற்றினால் வேறு இருப்பிடங்களை மாநகரசபை தர ஏற்பாடுசெய்யவேண்டும்.

யாழ். நகரில் குருநகர், ரயில் பாதையடி, தண்ணீர்த்தாங்கியடி, தாராக்குளம், நாவாந்துறை ஆகிய இடங்களிலுள்ள மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருப்போரை விட்டுவிட்டுக் கடந்த 6 மாதங்களாகக் குடியிருக்கும் எம்மை வெளியேற்றுவது நியாயமற்ற செயல்.

எனவே எம்மை வெளியேற்றும் முயற்சியையும் கைவிடவேண்டும்.''

---

## ஈழவிடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை மாவட்ட திராவிட கழகத்தின் ஆதரவில் இந்த மாநாடு நடைபெறும்.

தமிழ் ஈழ விடுதலையை ஆதரிக்கும் அனைத்துக் கட்சி தலைவர்களையும் இந்தமாநாட்டுக்கு அழைக்க இருக்கிறோம்.

தமிழக அமைச்சர்களுக்கும் அழைப்பு அனுப்புவோம்.

மாநாடு முடிந்தவுடன்அங்கிருந்தே 4 பிரசார படைகள் புறப்படும்.

தமிழகத்தின் நாலு திசைகளுக்கும் அந்த பிரசாரபடை சென்று, கிராமம் கிராமமாக ஈழ விடுதலைக்கு ஆதரவான பிரசாரம் செய்து தமிழக மக்களிடையே விழிப்பு உணர்வை ஏற்படுத்துவார்கள்.

சுமார் ஒரு மாதகாலம்இந்த நடைப்பிரசாரம்நடைபெறும்.

---

## இந்தியாவில்,..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதற்கு அக்கறை செலுத்திய பிரதமர் இந்திரா இலங்கையில் 3000 பேர் கொல்லப்பட்டமைக்கு அக்கறை காட்டவில்லை என்று குறிப்பிட்டார்.

திண்டி வனம் ராமமூர்த்தி பேசுகையில் இலங்கைத் தமிழர் பிரச்னை தமிழ் நாட்டுப் பிரச்னையல்ல அது இந்தியாவின் பிரச்னையாகும். பிரதமர் இந்திரா பேச்சுவார்த்தைக்கு பேச்சு வார்த்தை, வன்முறைக்கு - வன்முறை என்ற குறிப்பிட்டிருப்பது இலங்கைத் தமிழர்பிரச்னை மீதிருக்கும் அக்கறையை காட்டுகிறது என்று குறிப்பிட்டார். மாக்கிஸ்ட் கட்சி திரு மாணிக்கம் பேசுகையில் இலங்கைக்கு இராணுவம் இப்போது அனுப்பத்தேவையில்லை. ஆனால் அது தேவையான சமயத்தில் இந்திய அரசு நாம் வற்புறுத்தாமலே செய்யும் என்றுகுறிப்பிட்டார்.

இதற்கிடையில் இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ்மாணவர்களுக்கும் மற்றும் தாயகம் திரும்பிய வம்சாவளித் தமிழ் மாணவர்களுக்கும் தமிழ்நாட்டின் பல் தொழில் நுட்பக்கல்லூரிகளில் 5 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. (சூ)

---

## மாதகல் மர்ம மரணம்! பகிரங்கத் தீர்ப்பு!!

(யாழ்ப்பாணம்)

மாதகல் மர்ம மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி க குணரத்தினம் பகிரங்கத் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

நெறிப்படுத்தாத சாட்சியம் அளிக்கப்படாததாலும், திடமான மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படாததாலும், காலமானவர் அடையாளம் காணப்படாததாலுமே பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டதாக மரணவிசாரணை அதிகாரி தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த 17ம் திகதி காலை மாதகல் வடக்கு துறைமுகத்தில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் மக்கிக்குள் இருந்து மீட்கப்பட்டது தெரிந்ததே.

இந்த மர்ம மரணம் சம்பந்தமாக காங்கேசன்துறைபொலிசாரால் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் நாளை திங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன், சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டத்தரணி எஸ். விஜயேந்திரா ஆகியோர் ஆஜராகியுள்ளனர். (மா)

---

## மரண அறிவித்தல்

### க. நாகரத்தினம்

(உடுவில்)

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரபல அரசாங்க கட்டிட ஒப்பந்தக்காரரும் ஆகிய க. நாகரத்தினம் அவர்கள் 29-10-83ல் காலமானார். இவர் கணபதி — சின்னச்சி அவர்களின் அன்பு மகனும், செல்வதியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, ஈஸ்வரி, குணேஸ்வரி, திருச்செல்வம் (அரசாங்க ஒப்பந்தகாரர்), தவராசா (அரசாங்க ஒப்பந்தகாரர்), ஜெயராசா ஆகியோரின் தகப்பனாரும், துரைராசா (அரசாங்கஒப்பந்தகாரர்), அன்னம்மா ஆகியோரின் சகோதரரும், வைத்திலிங்கம், சின்னத்தம்பி, இரத்தினம், மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனரும், ஜெயரத்தினம் (ஈராக்), சண்முகநாதன் (நீர்ப்பாசன இலாக்கா, அனுராதபுரம்), சந்தானலட்சுமி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பூவோடை மயானத்தில் மாலை 4 மணிக்கு தகனம் செய்யப்படும்.

உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(9618)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B 100236/81. Eelanadu-P. O. Box 49, Telegram: Eelanadu. Telephone: 22389—24126